**மாவனல்ல பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாவனல்ல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண சேகரித்தலுக்காக செலுத்தவேண்டிய பதவியணியினர் படி ரூபா 65,575 குறைத்து ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் பிரதேச சபையின் வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் வேலைகளுக்கான ரூபா 610,821 கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தும், பிரதேச சபை காசேட்டில் ரூபா 576,835 தொகையான மீதியொன்று மாத்திரம் எஞ்சியிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 33,986 தொகைக்காக தேவையான சீராக்கங்கள் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2 வேலைகளுக்காக கிடைக்கப் பெற்ற ரூபா 19,400 தொகை, மூலதன நிதிஉதவி மற்றும் மூலதனச் செலவினத்தின் கீழ் ரூபா 194,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 174,600 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நானாவித நிதியத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதிஏற்பாடு மூலதன நிதிஉதவி மற்றும் மூலதனச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய மற்றும் நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 60,223,668 தொகை கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அதிகாரசபையின் கணக்கிலிருந்து ஊழியர் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 474,806 தொகை மீண்டும் ஊழியர் கடன் கணக்கில் பெற்றுக் கொள்ளும் போது சுற்றாடல் அதிகாரசபைக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிலிருந்து பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்ட ரூபா 3,480,000 பெறுமதியான ரெக்ரர் மற்றும் டோலர் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைத்து பொது வைப்புக் கணக்கு மூலமாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60,000 தொகையான நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தில் அவசர இடர் முகாமைத்துப் பிரிவிலிருந்து கிடைத்த ஏலம் கூறப்பட்ட பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 628,857 பெறுமதியான 568 கல்வனைஸ் கொடிக் கம்பங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 27,377,614 ஆக இருந்ததுடன் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 27,552,369 ஆனமையால் இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு ரூபா 174,755 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகளும் செலுத்த வேண்டிய கணக்குகளும்

மீளாய்வாண்டின் இறுதியில் 1999 முதல் அறவிடவேண்டியிருந்த 6,818,750 மீதியொன்றும் 1980 முதல் செலுத்த வேண்டிய ரூபா 20,511,417 மீதியொன்றும் காணப்பட்டன.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 570(ஈ) | 2007 ஆம் ஆண்டு முதல் 2012 வரை வைப்புச் செய்யப்பட்ட ரூபா 269,989 கூட்டுத் தொகையான நிர்மாண வைப்புக்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்களை விஞ்சிய ரூபா 561,078 கூட்டுத்தொகையான நானாவித வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 105(இ) | வெளியே விநியோகிக்கப்பட்ட ரூபா 26,337 பெறுமதியான 169 நூலகப் புத்தகங்கள் நீண்டகாலமாக மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை | |
| 261.2.2 ஆம் விதி | இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 46,942 கூட்டுத்தொகையான முற்பணம் 01 வருடம் 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 ஆந் திகதிய 3/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2012 , 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது தலைவரை உள்ளடக்கிய உறுப்பினர்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 2,205,000 கூட்டுத்தொகையான எரிபொருளின் படி சபைக்குரிய கடைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23.521,628 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,881,817 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 360,189 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 360,189 தொகை வீழ்ச்சியடைவதற்கு 02 வருமான விடயங்களில் குறைவும் 06 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i. | ஆதனவரியும் வரியும் | 15,715 | 7,468 | 11,773 | 4,723 | 8,247 | 7,050 | 15,297 |
| ii. | வாடகை | 1,850 | 52 | 18,634 | 18,517 | 1,798 | 117 | 1,915 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 156 | 25 | 1,086 | 1,075 | 131 | 11 | 142 |
| iv | ஏனைய வருமானம் | 54,087 | 51,033 | 54,921 | 31,401 | 3,054 | 23,519 | 26,573 |

### 2.3.2 தொலைத் தொடர்புக் கோபுர வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 09 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்கள் மற்றும் அந்தக் கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள 10 ஏனைய தொலைத் தொடர்புகளுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமையினால் ரூபா 446,000 தொகையும், இணக்கச் சான்றிதழ் வழங்கப்படாமையினால் ரூபா 42,000 தொகையும், வியாபார வரி அறவிடப்படாமையினால் ரூபா 30,000 தொகையும் ஆக ரூபா 518,000 கூட்டுத்தொகையான வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

பொதுச் சந்தையின் இறைச்சிக்கடை, மீன்கடை என்பவற்றை வாடகைக்கு வழங்கும் போது மாதாந்தம் உரிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டாமையினால் 2002, 2003, 2005 ஆம் ஆண்டிடுகளுக்குரிய ரூபா 452,875 கூட்டுத்தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார நிறுவனங்களை வருடாந்தம் மெய்மையாய்வு செய்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபை அதிகாரப் பிரதேசதத்தில் நடாத்தப்படுகின்ற வியாபாரங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் 238 இடங்களிலிருந்து ரூபா 127,950 தொகையும், 2013 ஆம் ஆண்டின் போது 09 இடங்களிலிருந்து ரூபா 13,750 தொகையும் 2014 ஆம் ஆண்டின் போது 87 இடங்களிலிருந்து ரூபா 62,100 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 203,800 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார நிலையங்களின் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கும் கொடுப்பனவுகளைப் புறக்கணிக்கின்றவர்கள் தொடர்பாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், நடவடிக்கை எடுக்குமாறு இரண்டு வருமானப் பரிசோதகர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையிலும் அக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பின்களிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,715,250 உம், முத்திரைக் கட்டணமாக ரூபா 16,789,058 உம் கிடைக்க வேண்டி இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி அமைச்சிலிருந்து பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று சந்தர்ப்பங்களின் போது கிடைத்த ரூபா 3.000,000 உதவித் தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் செலவினம் ரூபா 651,448 அதாவது 21.72 சதவீதமாகவும் 2015 மார்ச் 27 கணக்காய்வுத் திகதி வரையிலும் மொத்தச் செலவினம் ரூபா 1,019,068 அதாவது 33.97 சதவீதம் ஆகவும் மாத்திரம் இருந்தன.

(ஆ) புதிய பிரதேச சபைக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காலத்தில் வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் பெறப்பட்ட தற்காலிக கட்டிடத்தில் கண்ணாடிக் கொட்டகையை நிர்மாணிப்பதற்கான ரூபா 116,400 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்தில் 2011 ஆம் ஆண்டின் போது அலுவலகம் திறக்கப்பட்டிருந்த போதிலும் வாடகை அடிப்படையில் பெற்ற கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் 2015 மார்ச் 30 கணக்காய்வுத் திகதி வரையிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 மார்ச் மாதத்தில் சப்ரகமுவ மாகாண பிரதம அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 1,425,000 பெறுமதியான உழவு இயந்திரமும் டேலரும், ரூபா 2,900,000 பெறுமதியான கலிபவுசருடன் கூடிய ரெக்டர் மற்றும் 2014 திசெம்பர் மாதத்தில் கிடைத்த ரூபா 1,876,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் டேலர் என்பவற்றை பிரதேச சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹெம்மாத்தகம சந்தைத் தொகுதியில் முதலாம் மற்றும் இராண்டாம் மாடிகளுக்காக ஒரே தடவையில் பணம் பெற்ற நபர்களுக்கு அதில் இரண்டாம் மாடியின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாமையினால் முதலாவது மாடியில் 5 கடைகளிலிருந்து ரூபா 1,356,524 தொகையும், இரண்டாவது மாடியில் 2 கடைகளிலிருந்து ரூபா 251,250 தொகையும் ஆக ரூபா 1,607,774 தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(உ) சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் தொடர்பான கட்டிட வரைபடத்திட்டம், நில அளவைப் பத்திரத்தை அங்கீகரித்தல் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றாடல் அதிகாரசபை, கட்டிட ஆராய்ச்சி நிறுவகம், பிரதேச சபை போன்ற அரச நிறுவனங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு உத்தியோகத்தர் வீதமும், பொது சுகாதாரப் பரிசோதகரையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஐந்து நாட்களில் தலைவரின் விருப்பின் அடிப்படையில் நிலஅளவைத்திட்டம் அங்கீகரித்தல், கட்டிட வரைபடத்திட்டம் அங்கீகரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து 2014 நவம்பர் 17 ஆந் திகதி கிடைத்த ரூபா 628,857 பெறுமதியான 568 கலவனைஸ் கொடிக் கம்பங்களில் 2015 மார்ச் 24 கணக்காய்வுத் திகதி வரையிலும் 206 கொடிக் கம்பங்கள் அலுவலக வளவிலும், 128 கொடிக் கம்பங்கள் வெளிநபர்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 234 கொடிக் கம்பங்கள் தொலைந்து போயிருந்தன.

(எ) வெளி நிறுவனங்களிலிருந்து சபைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 12,794,997 பெறுமதியான 04 நிலையான சொத்து விடயங்களை சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை விஞ்சிய செயற்பாடற்ற 02 வங்கிக் கணக்குகளின் பெறுமதி ரூபா 15,693 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனமும் வண்டியினதும் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 625,000 பெறுமதியான இலக்கம் 53-5643 என்ற கெப்வண்டி விபத்திற்குட்பட்டதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு முதல் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படும் வகையில் மாவனல்ல சிறுவர் பூங்கா அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 70,000 பெறுமதியான தார் சூடாக்கி மற்றும் ரூபா 485,000 பெறுமதியான வைப்ரேட்டின் ரோல் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கூட்டுப்பசளைச் செயற்திட்டத்தின் தளத்தில் இயற்கைப் பாதிப்புக்களுக்கு உட்படும் வகையில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 சுற்றாடல் பிரச்சினைகள்

-------------------------------------------

கலி பவுசரிலிருந்து எடுத்துவரப்படும் மலக்கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான சுகாதார பாதுகாப்பு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் ஒதுக்கப்பட்ட 05 வேலை விடயங்களின் ரூபா 12,524,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டில் 100 சதவீதமும், 13 வேலை விடயங்களில் ரூபா 8,783,970 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் 52 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையேயும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 21,307,970 சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 வேலை விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி ரூபா 408,980 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2 வருமானத் தலைப்புக்களில் ரூபா 12,100,000 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்